489

489
3.52

திரிசிராமலைக் கோயில்

வரலாறு

[ஆங்கிலப் பகுதிகளுடன்]

REGISTRAR OF BOOKS
13 AUG 952
MADRAS

O223:38·2119 .T
N52.4
112-890.

தேவஸ்தான வெளியீ

13 AUG 952
MADRAS

சிவமயம்.

திரிசிராமலைக் கோயில் வரலாறு

(ஆங்கிலப் பகுதிகளுடன்)

திரிசிரபுரம் மலைக்கோட்டை தமிழ் ஆசிரியரும்
H. R. E. போர்டு ஆதரவில் பல கோயில் வரலாறுகளை
எழுதியவரும் ஆகிய
திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்
எழுதப்பெற்று

தேவஸ்தானம் நிர்வாக அதிகாரி
திரு. E. S. ஆதித்தராமன் B. A. அவர்கள்
மானேஜிங் டிரஸ்டி
திரு. T. M. முத்துசாமி பிள்ளை அவர்கள்
டிரஸ்டிகள்
திரு. K. சின்னச்சாமி ஐயர், M.A., அவர்கள்
திரு. A. சிதம்பரம் பிள்ளை அவர்கள்
ஆகியோர்களால் வெளியிடப்பெற்றது.

நான்காம் பதிப்பு

1952

உரிமை செய்யப்பெற்றது] [விலை 6 அணா



திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலும், தெப்பக்குளமும்.

முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக, ஆன்ருேர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. தென்னுட்டுக்கோயில்களில் திரிசிராமலேக்கோயில் சிகரமாக விளங்குகின்றது. கோயிலுக்கு வருவோர், கோயிலின் பெருமைகளேயும், வரலாறுகளேயும் அறிந்து கொள்வது நலம். சென்னே அறநிலேயப் பாதுகாப்புக் கழகத்தார் (Hindu Religious Endowments Board) தேவஸ்தானங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு செவ்வந்திப் புராணத்தைத் தழுவி எழுதப் பட்டது. முன்வெளியிட்ட பிரதிகள் செலவாகிவிட்டதால் இப்பதிப்பு புதிய சேர்க்கைகளுடன் வெளிவந்திருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வரும் அன்பர்களும், கோயிலேப் பார்க்க வருபவர்களும் இக்கோயிலின் விவரங்களே ஆங்கிலத்தில் எதிர்பார்த்துக் கேட்டுவந்ததால் இப்பதிப்பில் சில பகுதிகள் ஆங்கிலத்தில் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன. அவைகளே எனது நண்பர் திரு. **G.** கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் **M. A., L. T.** அன்புடன் தயாரித்து உதவினுர்கள். அவர்களுக்கு எனது நன்றியும், தெய்வத் திருவருளும் சேர்க. அன்பர்கள் படித்து ஸ்ரீதாயான செல்வரின் திருவருளேப் பெறுக.

திருச்சிராப்பள்ளி,
8—5—52.

R. பஞ்சநதம் பிள்ளே,
தமிழ் ஆசிரியர்.

உள்ளுறை

		பக்கம்
1.	தலமும் பெயர்களும்	... 1
2.	மூர்த்திகளின் பெயர்கள்	... 2
3.	தீர்த்தங்கள்	... 3
4.	தலப்பெருமை	... 4
5.	புராண வரலாறுகள்	
	(1) பூர்வ வரலாறு	... 5
	(2) இறைவர் தாயான வரலாறு	... 6
	(3) இறைவர் மேற்குமுகங் கொண்டது	... 8
	(4) தான்றோன்றீஸ்வரர் வரலாறு	... 9
	(5) மட்டுவார் குழலியம்மையின் திருமணம்	... 10
	(6) தாயுமான அடிகள் வரலாறு	... 11
	(7) சரித்திர வரலாறு	... 13
6.	குகைக்கோவில்களும் கல்வெட்டுக்களும்	... 14
	(1) இரண்டு தூண்களில் உள்ள வடமொழிக் கல்வெட்டுக்களின் செய்திகள்	... 15
	(2) தமிழ்க் கல்வெட்டுக்கள்	... 16
7.	மண்டபங்கள்	... 18
	(1) வாகன மண்டபம்	... 19
	(2) நூற்றுக்கால் மண்டபம்	... 19
	(3) சித்திர மண்டபம்	... 20
	(4) பதினாறுகால் மண்டபம்	... 20
	(5) மணி மண்டபம்	... 21
8.	உச்சிப்பிள்ளையார் கோவில்	... 21
9.	மௌன மடம்	... 22
10.	பூசித்துப் பேறு பெற்றோர்	... 23
11.	தினப்பூஜையும் திருவிழாக்களும்	... 23
12.	திருப்பணிகள்	... 24
13.	சொத்துக்கள், நிலம், வீடு முதலியன	... 26
14.	நகைகள்	... 27
15.	வருட வருமானம்	... 27
16.	சுற்றுக் கோவில்கள்	... 27
17.	ஆலய நிர்வாகம்	... 27
18.	தலதேவாரமும் பிற தனிப்பாடல்களும்	... 28
19.	தனி நூல்கள்	... 34
20.	English Translations : (1) Tiruchirapalli	... 41
	(2) The Lord appeared as mother	... 43
	(3) Saint Thayumanavar	... 45

உ

சிவமயம்

திரிசிராமலைக்கோயில் வரலாறு

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே.

1. தலமும் பெயர்களும்

ஆதிநடு அந்தங்கடந்த, பரம்பொருளாகிய இறைவன் உலகத்தில் உள்ள உயிர்கள் துன்பங்கள் நீங்கிச் சுகம் பெற்றுய்யும் வண்ணம் ஆங்காங்குள்ள பல கோயில்களில் எழுந்தருளியிருந்து அருள் செய்து வருகின்றான். தமிழ் நாட்டில் அத்தகைய சைவத் தலங்கள் 274 உள்ளன. அவற்றுள் பள்ளி என்ற முடிபைக்கொண்ட பல திருப்பதிகளுள், என்றும் வற்றாத புனலுடைய-கங்கையிற் புனிதமாகிய காவிரி பாயும் சோழநாட்டில், காவிரிக்குத் தென்கரையில் திருச்சிராப்பள்ளி என்னும் ஓர் சிறந்த தலம் உள்ளது. இது திரிசிராமலை, திரிசிரபுரம், திரிசிரகிரி, முத்தலைமலை, பிரமகிரி எனவும் பெயர்கள் பெறும். பள்ளி என்பது கோயில் எனப் பொருள்படும். திரிசிரன் என்னும் அரக்கன் அரசாண்டு இறைவனை வழிபட்டுப் பேறுபெற்ற தால் இப்பெயர் உண்டாயிற்று என்று புராணங்கூறும்.

இதை அன்றி இம்மலையில் திரிசிரம்—அதாவது சுவாமி, அம்மன், உச்சிப்பிள்ளையார் என்னும் மூன்று சிகரங்கள் உள்ளமையால் இப்பெயர் பெற்றதென்றும் அறிஞர் கூறுவர். பிரமனுடைய பெயர் அமைந்ததால் பிரமகிரி எனவும், பார்வைக்கு ரிஷபம்போல் தோன்றுவதால் ரிஷபாசலம் எனவும் பெயர்பெறும். கைலைமலையின் தொடர்பு பெற்றதால் இது தென் கைலாயம் எனச் சிறப்பாகச் சொல்லப்படும். சிலையில்-கல்லில் குடைந்த பள்ளி என்னும் பொருளில் சிலைப்பள்ளி, சிலாப்பள்ளி, சிராப்பள்ளி என்னும் பெயர்கள் அமைந்ததாக ஆராய்ச்சியாளர் கூறுவர். திருச்சி டவுன் ரயில்வே ஸ்டேஷனிலிருந்தும், திருச்சி கோட்டை ஸ்டேஷனிலிருந்தும் இத்தலத்தை அடையலாம்.

2. மூர்த்திகளின் பெயர்கள்

மலைமேல் எழுந்தருளியிருக்கும் இறைவருக்குச் செவ்வந்திநாதர், திருமலைக் கொழுந்தர், தாயுமானவர் என்னும் பெயர்கள் வழங்கும். அம்பிகையின் பெயர் மட்டுவார் குழலம்மை. வடமொழியில் மாத்ரு பூதேஸ்வரர் - சுகந்த குந்தளாம்பிகை என்னும் பெயர்கள் உண்டு. பழய சாஸனங்களால் இம்மலைக்குத் திருமலை என்னும் பெயரும், இறைவனுக்குத் திருமலைப்பெருமான் அடிகள் என்னும் திருநாமமும், நகருக்குச் சிற்றம்பர் என்ற பெயரும் உண்டென்று தெரிகிறது. சாரமாமுனிவர் செவ்வந்தி மலரால் பூசித்த காரணத்தால் செவ்வந்திநாதர் என்றும், மலையின் கொழுந்தாயிருப்பதால் திருமலைக்கொழுந்தர் என்றும், ஓர் பெண்ணின் அன்புக்காக தாயாக வந்து, உதவியதால் தாயுமானவர் என்றும் பெயர்கள் வழங்கலாயின. தலவிநாயகர்,

செவ்வந்தி விநாயகர் என வழங்கப் பெறுவர். கோவிலின் அடிவாரத்தில் மாணிக்க விநாயகர் சன்னதி பிரசித்தி பெற்று விளங்குகிறது.

3. தீர்த்தங்கள்

இக்கோயிலுக்குரிய தீர்த்தங்கள் காவிரி, சிவகங்கை, சோமரோகணி என்னும் பிரமதீர்த்தம், நன்றுடையான், தீயதில்லான் முதலியன.

1. காவிரி:—இது ஊருக்கு வடக்கே அரைமைல் தூரத்தில் ஓடுகின்றது. 'குடக காவிரி நீளலே சூடிய திரிசிராமலே மேலுறைவீர' என்னும் திருப்புகழ் வரியின்படி காவிரி முற்காலத்தில் மலேக்கு அருகில் ஓடியதாகத் தெரிகிறது.

2. சிவகங்கை:—இது கோவிலுக்கு வடமேற்கில் நாகநாதசுவாமி கோவிலுக்குப் பக்கத்தில் உள்ளது. (இவ்விடத்தில் அம்பிகை பெருமானே மணப்பதற்குத் தவம் செய்ததாகச் சொல்லப்படுகின்றது.)

3. சோமரோகணி:—இது பிரம தீர்த்தம் என்றும் சொல்லப்படும். இது கோயிலுக்கு மேல்புறம் மைய மண்டபத்துடன் அமைந்த அழகுள்ள தெப்பக்குளம் ஆகும். 16-வது நூற்றுண்டில் திருச்சியை ஆண்ட விசுவநாத நாயக்கரால் கட்டப் பெற்றது. இதில் பங்குனி மாதத்தில் தெப்பத் திருவிழா நடைபெறும். இக்குளம் என்டோவ்மெண்ட் போர்டின் உத்திரவுப் பிரகாரம் (23—6—49) தேதி உள்ள ஒப்பந்தப்படி திருச்சி நகர

சபைக்கு 99 வருஷங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

4. நன்றுடையான் :—இது திருச்சி டவுன் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்திலும் கோவிலுக்குக் கிழக்காக $\frac{1}{4}$ மைல் தூரத்திலும் உள்ளது.

5. தீயதில்லான் :—இது கோவிலுக்குத் தெற்கில் உட்குளம் என்னும் பெயருடன் அமைந்துள்ளது. தற்போது இவ்விடத்திலேயே அம்மன் தவஞ்செய்யும் விழா சித்திரை மாதம் பிரமோத்ஸவத்தில் 6-ம் திருநாள் நடைபெறுகிறது.

இவற்றுள் நன்றுடையான், தீயதில்லான் என்பவற்றை, திருஞானசம்பந்தர் தேவாரத்தின் முதற் செய்யுளில் காணலாம்.

4. தலப்பெருமை

தென்னாட்டில் இத்தலம் தெக்ஷிண கைலாசம் என்று சொல்லப்படுகின்றது. இத்தலம் கீழேயிருந்து சுவாமி சந்நிதி வரையில் மேல் தளம் மூடப்பட்ட படி வழிகளைக் கொண்டது. அம்மன் கோவிலுக்கு மேல் உள்ள சுவாமி கோயில் மாடிக்கட்டிடமாக (terraced) அமைந்துள்ளது. ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் 23, 24, 25 தேதிகளில் மூல லிங்கத்தின்மேல் மாலைச் சூரியனின் கதிர்கள் பிரகாசிப்பதுண்டு. இதைச் சூரிய பூஜை என்பர். மலையின் மேலும் கீழும் கல்லில் குடையப்பட்ட இரு குகைக் கோயில்கள் உள்ளன. மேல்குகையில் கிரந்தத்திலும் தமிழிலும் பல கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. கற்கோயிலாகிய இத்தலத்துக்குச் சொற் கோயில்களாகிய

பல இலக்கியங்களும் பெருமையளிக்கின்றன. நகருக்கு நடுவே மலையமைந்து ஆங்காங்கிருந்து தரிசனம் செய்வோர்க்கு நாயகமாக விளங்குகிறது. சங்க நூல்களில் இம்மலை நெடும்பெருங்குன்றம் எனப் புகழப்பட்டுள்ளது. அகநானூற்றில் "கறங்கிசை விழவின் உறந்தைக்குணது—நெடும் பெருங்குன்றம்" என்று கூறப்பட்டுள்ளது.

புராணத்தின்படி மூர்த்தி; தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. திருவாரூரில் பிறந்தடையும் முத்திப் பேறும், இத்தலத்தில் எளிதில் கிடைக்கும். தெரிந்தும் தெரியாமலும் செய்கின்ற பாவங்கள் தீரும். தலப்பெயரைப் பக்தியுடன் சொன்னாலும் தீவினை நீங்குமென்பது அப்பர் சுவாமிகளின் அருள் வாக்கு.

சித்திரை மாதப்பிறப்பிலும், கடைசியிலும், பூரநட்சத்திரம் நவமிதிதி கூடிய சுபதினத்திலும் கிரியை வலம் வருவோர் எண்ணிய பேற்றைப் பெறுவர். சோமவாரம் ரோகணி நட்சத்திரம் கூடிய நன்னாளிலும், பங்குனி மாதத்திலும் பிரம தீர்த்தத்தில் மூழ்கி வழிபடுவோருக்குச் சகல பேறுகளும் சித்திக்கும். புரட்டாசிப் பௌர்ணமியில் சிவகங்கையில் மூழ்கித் தும்பை மலரைச் சூட்டி வணங்குவோர் நல்வாழ்வு பெறுவர்.

5. புராண வரலாறுகள்

(1) பூர்வ வரலாறு

முன்பு ஒரு காலத்தில் திருக்கைலாயகிரியில் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்குவதற்காகத் தேவர் முதலிய யாவரும் வந்திருந்தனர். அப்போது ஆதிசேடன் வர அவனை யாவரும் புகழ்ந்து கொண்டாடினர். இதைக் கண்ட வாயுதேவன் மிகுந்த பொறாமையுற்று ஆதிசேடனை

இகழ்ந்து பேசலானன். பின்பு இருவரும் இது காரண மாக மிகவும் மனத்தாங்கல்கொண்டு தங்களைப்பற்றித் தற்பெருமை பாராட்டிக்கொண்டதோடு, தங்கள் வல்லமை களைச் சோதிக்கவும் முற்பட்டனர். பின்பு ஆதிசேடன் தன் உடலால் கைலைமலையை இறுகப் பிணித்துக் கொண்டான். வாயுதேவன் தன் பலங்கொண்ட மட்டும் காற்றை வீசத்தொடங்கவே, உலகமெல்லாம் அதிரத் தொடங்கின. அப்போது கைலைமலையிலிருந்து மூன்று துண்டுகள் கிளம்பி ஒன்று திருக்காளத்தியிலும், மற் ருென்று திரிசிராமலையிலும், வேருென்று இலங்கையிலுள்ள திருக்கோணமலையிலும் விழுந்தன. திருக்கைலை மலையின் துண்டுகள் விழப்பெற்றமையால் இவை மூன்றும் தென் கைலாயம் எனப்பெயர் பெற்றன. இவற்றுள் திருக் காளத்தி, திருக்கோணமலை இவைகளுக்கு நடுநாயகமாகத் திரிசிராமலை இருப்பதால் இதற்கு அதிக மகிமை உண்டு சங்க நூல்களில் இத்தலத்தைப்பற்றிய பாடல்கள் வருவ தால் இதன் பழமை நன்கு தெரியவரும்.

(2) இறைவன் தாயான வரலாறு

சோழநாட்டில் காவிரி கடலோடு சேரும் இடமும் பல வளங்களும் நிறைந்து சோழர்களுக்குத் தலைநகரமாய் விளங்கியதும், இயற்பகை நாயனரும், பட்டினத்தடிகளும் அவதரிப்பதற்குக் காரணமாய் இருந்ததுமாகிய காவிரிப்பூம் பட்டினம் என்னும் ஊர் ஒன்று உண்டு. இது புகார் எனவும் வழங்கும். இந்தப் பதியில் வணிகர் குலத்தில், பெருங்குடியிற் பிறந்த இரத்தினகுப்தன் என்பவன் தன் கற்புடைய மனைவியோடு இல்லறம் நடத்தி வருங்கால், புத்திரப்பேறின்றி இறைவனை வழிபட்டு வந்தான். இறை வன் திருவருளால் ஓர் புதல்வியைப் பெற்றெடுத்து அதற்கு

இரத்தினவதி என்னும் பெயரிட்டு வளர்த்து வந்தான். இரத்தினவதி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாய் வளர்ந்து வந்து மணப் பருவத்தை அடைந்தாள். இரத்தினகுப்தன் இரத்தினவதியைத் திரிசிராமலையில்வாழும் தனகுப்தன் என்னும் வணிகனுக்குத் தனது இல்லத் திலேயே மணம் செய்து கொடுத்துப் பல சீர்வரிசைகளு டன் ஊருக்கு அனுப்பிவைத்தான். வந்ததுமுதல் தினமும் இரத்தினவதி திரிசிராமலை செவ்வந்திநாதரை தவறாமல் அன்புடன் வழிபட்டு வந்தாள். நாளடைவில் இரத்தின வதி சிராமலைப் பெருமான் அருளினால் கருப்பவதி ஆகி, பேறுகாலம் எய்தினாள். இச்செய்தியைக் காவிரிப்பூம்பட் டினத்தில் உள்ள தன் தாய்க்குத் தெரிவித்தாள். தாயும் மகளுக்கு வேண்டிய மருந்து எண்ணெய் முதலியவைகளு டன் புறப்பட்டு வரும்போது காவிரியாற்றில் வெள்ளப் பெருக்கு மிகுதியாகி அவளை வரமுடியாதபடி தடுத்து விட்டது. மகளும் " தாய் இன்று வருவாள், நாளை வரு வாள். நமக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு வரு வாள் " என்று எண்ணிக்கொண்டிருந்தாள். பிரசவ நேரம் நெருங்கியும் தாய் வரவில்லை. இச்சமயத்தில், இரத்தினவதி தான் வழிபட்டு வந்த சிராமலை செவ்வந்திநாதரை வேண்ட

" சங்க ரன்சிவன் சதாசிவ னீசனீ சானன்
புங்க வன்றிரி புராந்தகன் புராதனன் புராணன்
கங்கை நாயகன் கறைமிடற் றிறைநுதற் கண்ணன்
எங்க ணாயக னிராமயன் சிராமலை யிறைவன்

பூர ணன்பரன் பராபரன் வெள்ளியம் பொருப்பன்
கார ணன்மத னுந்தகன் காலனைக் கடிந்தோன்
வார ணந்தனை யுரித்தவன் மறைப்பொருள் வகுத்தோன்
நார ணன்றனக் கரியவன் சிராமலை நாதன் "

சிவபெருமானுர் இரத்தினுவதியின் தாய்வேடங் கொண்டு பிரசவ வேதனையால் வருந்திக்கொண்டிருந்த இரத்தினுவதியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். பெண்ணும் வந்தவளைத் தாயெனவே எண்ணி மகிழ்ந்தாள். தாயும் ஆனவரும் வேண்டிய சிகிச்சைகளைச் செய்தார். இர்த்தினு வதி சுகமாகப் பிரசவித்தாள். அழகிய ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தாயாக வந்தவர் சிலநாள் தங்கிக் குழந்தையை யும், தாயையும் பாதுகாத்து வந்தார். இது இவ்வாருக, வெள்ளம் வடிந்தவுடன் உண்மைத்தாய் நதியைக் கடந்து இரத்தினுவதியின் வீட்டிற்கு வந்தாள். இரத்தினுவதியும் கண்டாள். திகைத்தாள். இரு தாயாருள் எவர் உண்மைத் தாய் என்று கவனித்தாள். தாயாக வந்தவர் உடனே மறைந்து ஆகாயத்தில் இடபவாகனத்தில் காட்சி கொடுத் தார். எல்லோரும் தரிசித்து இன்புற்ருர்கள். அன்றுமுதல் இக்கோயில் சிராமலைச் செவ்வந்திநாதருக்கு தாயுமானவர் என்ற பெயரும் உண்டாயிற்று. இரத்தினுவதியும் பெரு மானை வழிபட்டதால் அடியார்களுள் ஒருவராக இன்றும் விளங்குகிருள். (இவ்வரலாறு கோயில் பிரம உற்சவத்தின் 5-ந் திருவிழாவன்று சிறப்பாக நடைபெறுகிறது.) இதைக் குறிக்கும் சித்திரங்கள் மேல் மண்டபச் சுவரில் வரையப் பட்டுள்ளன.

(3) இறைவர் மேற்குமுகங் கொண்டது

சாரமா முனிவர் என்பவர் சிராமலைப் பெருமானுக் கென்று ஓர் நந்தவனம் ஏற்படுத்தி அதில் நாகலோகத்திலி ருந்து கொண்டு வந்த செவ்வந்தி மலரைப் பயிரிட்டுத் தினந் தோறும் அம்மலரைக் கொண்டு பெருமானைப் பூஜித்து வந்தார். கோழியூர் என்னும் உறையூரில் பராந்தகச்

சோழன் என்பவன் அரசாண்டு வந்த காலத்தில் பூவாணிகன் ஒருவன் முனிவருடைய நந்தவனத்தில் புகுந்து செவ்வந்தி மலர்களைக் கவர்ந்து அரசனது தேவிக்குக் கொடுத்து வந்தான். முனிவர் ஒரு நாள் மறைந்திருந்து கவனித்து அரசனிடம் முறையிட்டார். அரசன் அவனைக் கண்டிக்கவில்லை. முனிவர் பெருமானிடம் முறையிட்டார். சிராமலை இறைவர் கிழக்கிலிருந்து மேற்கு முகந் திரும்பினர். பல மேகங்களைக் கொண்டு உறையூரில் மண்மாரி பொழியச் செய்தார். அரசனும் கர்ப்பமுற்ற மனைவியும் வெளியேகினர். உறையூர் மண்மாரியால் அழிந்தது. மண் மாரியும் அரசனைப் பின்பற்றிச் சென்றது. முடிவில் மன்னன் மாண்டான். காவிரியில் தவறி வீழ்ந்து தப்பிய தேவியான புவனமாதேவி ஓர் பிராமணனால் காப்பாற்றப் பட்டு ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தனள். இக் குழந்தை பிற்காலத்தில் கரிகால் சோழன் என விளங்கியது.

(4) தான்றோன்றீஸ்வரர் வரலாறு

மனுகுலத்தில் தோன்றிய ஜனநாதச்சோழனுக்குச் சூரவாதித்த சோழன் என்பவன் புதல்வனாகப்பிறந்து ஓர் கோழியானது யானையை வென்ற காரணத்தால் கோழியூர் என்று பெயர்பெற்ற உறையூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்து வந்தான். ஒருநாள் சோழன் வேட்டையாடும் பொருட்டுச் சாரமாமுனிவரின் நந்தவனப் பக்கத்தில் சென்றான். அப்போது ஆதிசேடனின் புதல்விகளாகிய நாக கன்னிகைகள் எழுவர் செவ்வந்தி மலருடன் சிராமலை நாதரைப் பூஜிக்கச் சென்றனர். அரசன் அவர்களைக் கண்டு மணம் செய்துகொள்ள விரும்பினான். அவர்கள் சம்மதிக்கவில்லை. அரசன் நாகலோகஞ் சென்று ஆதி

சேடனின் சம்மதம் பெற்றுக் கன்னிகைகளில் காந்திமதி என்பவளை மணம் செய்து ஆதிசேடனுல் கொடுக்கப்பட்ட சிவலிங்கத்தையும், வாட்படையையும் பெற்றுத்தன் நகரம் மீண்டு தான் கொண்டுவந்த லிங்கத்தைப் பிரதிட்டை செய்து பூஜித்து வந்தான்.

சோழன் மனைவியான காந்திமதியும் பக்திமேலீட்டால் கணவனின் அனுமதி பெற்றுத் தினந்தோறும் கால் வருந்த நடந்து சென்று திரிசிராமலைநாதரை வழிபட்டு வந்தாள். நாளடைவில் காந்திமதி கருப்பமுற்றும் தவருமல் தரிசித்து வந்தாள். ஒரு நாள் சூரிய வெப்பத்தால் நடக்கச் சக்தியற்றுச் சோர்ந்து வழியில் கீழே விழுந்தாள். ‘இன்றைக்குத் தரிசனம் கிடைக்காமற் போயிற்றே” என்று மனம் வருந்தினுள்.

உண்மை அடியார் துயரத்தை உடனே அகற்றும்படியான சிராமலை நாதர் அவ்விடத்தில் சுயம்பு லிங்கமாகத் தோன்றிக் காந்திமதிக்குக் காட்சி கொடுத்தார். இறைவர் சுயம்புவாகத் தோன்றியதால் தான்றேன்றீஸ்வரர் எனப்பெயர் ஏற்பட்டது. காந்திமதியும் பெருமானைப் பலவாறு போற்றிப் புகழ்ந்து தன் நகரம் மீண்டாள். சூரவாதித்தன் இவ்வற்புதத்தைக் கேட்டுத் தான்றேன்றீஸ்வரருக்குத் தனி ஆலயம் அமைத்துப் பூஜைகள் நடைபெறும்படிச் செய்தான். இக்கோயில் உறையூருக்குச் செல்லும் சாலையின் இடையில் உள்ளது. இதன் பெயரால் திருத்தாந்தோன்றி என்னும் கிராமமும் பக்கத்தில் உள்ளது.

(5) மட்டுவார்குழலியம்மையின் திருமணம்

உமாதேவியார் சிவபெருமானைப் பூஜிக்கவும் மணம் செய்துகொள்ளவும் விரும்பி இத்தலத்தில் ஓர் தாமரை மல

ரில் சிறிய பெண்குழந்தை வடிவங்கொண்டு தோன்றி காத்தியாயன முனிவரால் வளர்க்கப்பெற்று வந்தார். பெண்ணின் கூந்தல் இயல்பாகவே நல்மணம் வீசப்பெற்றதால் மட்டுவார்குழலி என அழைக்கப்பெற்ருர். அம்மையார் சிவகங்கை என்னும் தீர்த்தத்தில் முழுகிப் பக்கத்தில் சுயம்புவாய்த் தோன்றிய லிங்கத்தைப் பூஜித்துத் தவம் செய்து வரலானுர். இந்த இடம் நாகநாத சுவாமி கோயிலாக விளங்குகிறது. பெருமான் அவருடைய ஆதி விருப்பத்தை நிறைவேற்றக் கருதி எழுந்தருளி வந்து காட்சி கொடுத்து மணம் செய்துகொண்டார். சித்திரைத் திருவிழாவில் 6-வது நாளில் திருமண விழா நடைபெறும்.

இதனுல் சிவமாகிய செம்பொருள் சக்தியுடன் சேராவிடில் உலகில் ஒன்றும் நடைபெருதென்பதும், இறைவன் சக்தியைக்கொண்டே ஐந்தொழில்களையும் நடத்துகின்ருன் என்பதும் புலனுகின்றன.

(6) தாயுமான அடிகள் வரலாறு

சோழநாட்டில் வேதாரண்யம் என்று வழங்கப்படும் திருமறைக்காட்டில் இன்றைக்கு சுமார் 300 ஆண்டுகட்கு முன் சைவ வேளாளர் மரபில் கேடிலியப்பபிள்ளை என்பவர் வாழ்ந்து வந்தார். அந்நாளில், திருச்சிராப்பள்ளியில் அரசு புரிந்த விஜயரெகுநாத சொக்கலிங்க நாயக்கர் கேடிலியப்ப பிள்ளையின் நற்குணங்களைக் கேள்வியுற்று அவரை வரவழைத்து தமது அரசியல் கணக்கர் தொழிலில் அமர்த்திஞர். கேடிலியப்பபிள்ளை திரிசிரபுரத்தில் வேலை பார்த்து வரும்போது தமக்கிருந்த சிவசிதம்பரம் என்ற புதல்வனை தமது தமயனுருக்கு சுவீகாரம் செய்துகொடுத்து விட்டதி

ஞல் தமக்கு சந்ததி உண்டாகும்படி இத்திருசிராமலையில் கோவில்கொண்டிருக்கும் ஸ்ரீ தாயுமானப்பெருமானை தினந்தோறும் அன்புடன் வழிபட்டு வந்தார். பெருமான் அருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு **தாயுமானவர்** என்று பெருமான் பெயரையே வைத்தார்.

தாயுமானவர் இளவயதிலேயே கற்கவேண்டியவைகளைக் கற்று கேட்பன கேட்டு பலரும் புகழும் நிலையில் வளர்ந்து வரும்போது தந்தையார் காலஞ்செல்லவே அரசனது விருப்பப்படி தந்தையார் தொழிலை ஏற்று வேலை பார்த்து வந்தார். ஆனால் தாயுமானவருடைய மனம் ஞானாசிரியனைக் கண்டு நல்லுபதேசம் பெற்று பிறவிப்பிணியை நீக்கிக்கொள்ள வேண்டும் என்ற தீவிர எண்ணத்தில் இருந்ததினல் அவர் நாள்தோறும் ஸ்ரீ தாயுமானப் பெருமானை தான் ஈடேறும்படி காதலாகிக் கசிந்து வழிபட்டு வந்தார். அப்போது ஒரு நாள் திருமூல நாயனர் மரபில் தோன்றிய மௌனகுரு சுவாமிகள் தலயாத்திரைசெய்து வரும்போது இக்கோவிலிலுள்ள தக்ஷிணமூர்த்தி சந்நிதியில் நிஷ்டையில் இருந்தார். தாயுமானவர் வழக்கம்போல் சுவாமி தெரிசனம் செய்ய வந்ததும் காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்பு போல் நிஷ்டையில் இருந்த மௌனகுருவின் பாதத்தில் விழுந்து இறைஞ்சி நிற்க தாயுமானவரின் மனபக்குவ நிலையைக் கண்டு மௌனகுரு ஞான உபதேசம் செய்ததும் தாயுமானவர் சிவானுபூதிச் செல்வராய் விளங்கி "அங்கிங்குளனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது" என்ற பாட்டைப் பாடியும் வேதாந்த சித்தாந்த சமரசக் கருத்துக்கள் அடங்கியதும் யாவராலும் புகழப்படுவதுமான அநேக அருட்பாக்களையும்

உலகிற்குத் தந்தருளியிருக்கிருர். அதனுல் இவருக்கு தாயு மான அடிகள் என்ற பெயர் அமைந்தது. அவர் அருளி யிருக்கும் பாடல்களில் இக்கோவிலில் திருமேனிகொண் டிருக்கும் தக்ஷிணுமூர்த்தியின் பேரிலும் தன்னை ஆட் கொண்ட மௌனகுருவின் பேரிலும் ஸ்ரீ தாயுமானப்பெரு மான் பேரிலும் பாடிய பாடல்கள் சில இதில் சேர்க்கப் பட்டுள்ளன.

இவ்வாறு அடிகள் பற்றற்ற நிலையில் வாழ்ந்து பல தலங்களுக்குச்சென்று தெரிசனம் செய்து முடிவில் இராம நாதபுரத்தைச் சேர்ந்த லட்சுமி புரத்தில் 1742ல் நிருவிகற்ப சமாதியில் இருந்து இறைவன் திருவடியை அடைந்தார். அங்கு அடிகளுடைய கோவிலும் உள்ளது. இவருடைய அருட்பாக்கள் "தாயுமானவர் பாடல்" என வழங்குகின் றன. இப்பாடல்கள் சமரச நோக்குடையவை. இவரு டைய மாணுக்கர்களுள் சிறந்தவர் அருளையர் என்பவர். தாயுமான அடிகள் சிவத்தோடு கலந்த தினம் தை மாதம் விசாக நக்ஷத்திரம் ஆகும். அன்று இக்கோவிலில் தாயு மான அடிகளுக்கு விசேஷ அபிஷேகம், அலங்காரமும் உலா வும் நடைபெறுகிறது. மேலும் ஸ்ரீ தாயுமானப்பெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற அடியார்களில் ஒருவராகிய இவ ருக்கும் சித்திரை மாதம் பிரம்ம உற்சவத்தின் 14-வது நாளில் அடிகள் அருள்பெற்று உய்ந்த ஐதீகமும் இக்கோ விலில் கொண்டாடப்படுகிறது.

(7) சரித்திர வரலாறு

18-ம் நூற்றுண்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரருக்கும் நடந்த போர்க் காலங்களில் மலைக்கோயில்

வெடிமருந்துக்கூடமாக இருந்தது. இதற்கு அடையாள மாக மலைமேல் உள்ள குகைக் கோயிலில் தரையில் சில குழிகள் உள்ளன. இவ்விடத்தில் ஒரு சமயத்தில் வெடி விபத்து ஏற்பட்டு மேல் பக்கத்துத் தூணில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது கீழ்க் கோபுரவாயிலுக்குப் பக் கத்தில் கடைகளாக உள்ள இடங்கள் முன்பு ஆயிரக்கால் மண்டபமாக இருந்து அவ்விடத்தில் 1772ல் வெடிவிபத் தேற்பட்டுப் பின் கடைகளாக மாற்றப்பட்டன. இம்மண் டபம் 17-ம் நூற்றாண்டில் அநுப்பி என்ற பெண்ணால் கட்டப்பெற்றதென்றும், கோபுரவாயிலின் தூண்களில் அப் பெண்ணின் நினைவாக உருவம் அமைக்கப்பட்டுள்ளன வென்றும் வரலாறுகள் வழங்குகின்றன. உச்சிமலைக்கு மேல்புறம் பாறையில் மீன் வடிவம் உள்ளது. இது பாண் டிய மன்னரின் ஆட்சிக்கு அடையாளமாக இருக்கலா மெனக் கூறப்படுகின்றது. 1849-ல் விநாயகசதுர்த்தி விழா வில் எதிர்பாராதபடி ஜனநெருக்கடியால் உச்சிமலையில் ஓர் விபத்து ஏற்பட்டுப் பலர் இறந்தனர். 1866-ல் இரும்புத் தண்டவாளங்கள் இருபுறத்திலும் அமைக்கப்பட்டன.

6. குகைக் கோயில்களும் கல்வெட்டுக்களும்

இவ்வாலயத்தில் மலையைக்குடைந்து அமைத்த இரண்டு குகைக்கோயில்கள் உள்ளன. ஒன்று மலையின் மேலும், மற்றொன்று அடிவாரத்திலும் உள்ளன. மலை மேலுள்ள குகைக்கோயிலில் உள்ள அடையாளங்களால் 6-வது நூற்றாண்டில் இருந்த பல்லவ அரசனான குணபரன் என்ற மகேந்திரவர்மனால் இவை கட்டப்பட்டனவென்று தெரிகிறது. மேல்குகையில் வடமொழியிலும் தமிழிலும்

பல கல்வெட்டுக்கள் உள்ளன. இவையன்றி 104 செய்யுட்கள் அந்தாதியாகக்கல்லில் வெட்டப்பட்டுள்ளன.

(1) இரண்டு தூண்களில் உள்ள வடமொழிக் கல்வெட்டுக்களின் செய்திகள்

1. காவேரி என்பாள் இனிய நீர்ப்பெருக்கினை உடையவள். சோலைகளை மாலையெனச் சூடியவள். அவளைக்கண்டு நதிப்பிரியனான இந்தத்தேவன் காதலிப்பான் என்று எண்ணி மலைமகள் தான் பிறந்த குலத்தைவிட்டு இந்த மலையில் எப்போதும் நிலைத்திருந்து 'இந்நதி பல்லவனுடைய காதலி' யென்று சொல்லிக்கொண்டிருக்கிறாள்.

2. குணபரன் என்ற அரசன் இந்த லிங்கத்தினால் பெற்ற விபட்ச விருத்தியிலிருந்து (ஜைனமதத்திலிருந்து) திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலைத்திருப்பதாக.

3. சோழநாட்டின் சிகரமலையான இந்தச் சிவன் கோவில் அழியாத ஆபரணம் போன்றது. இதன் ஜோதி சங்கரனுடைய ஜோதி போன்றது.

4. சத்திய ஸந்தனுடைய பூதவுடல் புகழ்பெற இது கல் தச்சனாலே அமைக்கப்பட்டது.

5. மலை உச்சியில் அமைக்கப்பட்ட இந்த விசித்திரமான கற்கோவிலில் ஸ்தாணுவை (சிவனை) அசையாமலிருக்கும்படி பிரதிஷ்டை செய்து தான் அழியாப் பதவியை அடைந்தான்.

6. சத்துருமல்ல அரசன் அர்த்தபதியாதலின் மலை அரசன் மகளை மணந்த கிரீசனுடைய பெயரின் பொருளை விளக்க இம்மலையில் ஈசனைப் பிரதிஷ்டை செய்தான்.

7. "சோழர்களின் பெரும் செல்வத்தையும் அகன்ற காவேரி நதியையும் பூமியிலிருந்துகொண்டு நான் எவ்வாறு காண்பேன்" என்று வினவிய இறைவருக்குக் குணபரன் வானையளாவிய உன்னதமான இக்கோவிலை அமைத்தான்.

8. நிகரற்ற புருஷோத்தமனால் பார்வதிக்கும் பரமசிவனுக்கும் அமைக்கப்பட்ட இக்கோயில் (உச்சைசிர பர்வதம்) தான் தோன்றியதின் பயனை அடைந்தது. (உச்சைசிரபர்வதம்-உயர்ந்த தலையை உடையது.)

இம்மகேந்திர பல்லவனே சிவனடியாரான திருநாவுக்கரசரைப்பலவாறு துன்புறுத்திப்பின் சைவனாகி உபதேசம் பெற்றுத் தன் பெயரால் 'குணதரவீச்சரம்' என்னும் சிவன் கோவிலையும் திருவதிகையில் கட்டுவித்தான் என்று பெரியபுராணம் கூறும்.

(2) தமிழ்க் கல்வெட்டுக்கள்

இக்கோயிலைப் பற்றிய கல்வெட்டுக்கள் தென்னிந்தியக் கல்வெட்டுப்பகுதிகளில் 1904 - ம் ஆண்டில் 770 முதல் 790 எண்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளில் சில பின்னேகாட்டப்படும்.

1. மேல் குகைக்கோயிலில் வெளித்தூண் வரிசையில் மூன்றாவது தூணில், 10-வது நூற்றாண்டில் ஆண்ட சோழ வம்சத்து ராஜராஜகேசரி வர்மன், தன்பட்டத்தின் 16-வது ஆண்டில் விக்கிரமசிங்க மூவேந்தவேளான் என்பவன் விளத்தூர் நாட்டு ஆலங்குடியில் நிலம் வாங்கி அதனை உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பர் என்னும் திருச்சிராப்பள்ளியில் உள்ள கோவிலுக்கு நிலதானம் செய்த சாசனம்.

மலையின் மேல் உள்ள பல்லவர் குகை.

மலையின் கீழ் உள்ள பல்லவர் குகை.

இரத்தினவதி

இதன் விவரம் வருமாறு :—

" திருமகள்போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக்கோள் காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய வேங்கை நாடுங் கங்கபாடியும் நுளம்ப பாடியும் தடிகைப் பாடியும் குட்மலை நாடும் கொல்லமும் கலிங்கமும் திண்டிறல் வென்றி தண்டாற் கொண்டதன்னெழில் வளரூழியுளெல்லாயாண்டும். தொழுதகைவிளங்கும் யாண்டைச் செழியரைத் தேசு கொள் ஸ்ரீ கோவிந்தராஜராஜகேசரி பன்மற்குயாண்டு 16 வது -: உறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பர்த் திருச்சிராப்பள்ளியினிதிருந்தருளிய திரிபுவனபதிக்கு மூலப்பிரதான சண்டேஸ்வரப் பெருமாள் அருளால் பதிபாத மூலப்பட்டுடைப் பஞ்சாசாற்றிய தேவகன்மிகளோமும் சிற்றம்பல ஊரோமும் இத்தேவர்தேவன்—விளத்தூர் நாட்டு, ஆலங்குடி உத்தம சோழபன் மராற்றுக்கீழ்க்கரை, கிழக்கடைய மணலீடும், களரும், திடலுமாய்க்கிடந்த நிலன் $2\frac{1}{2}$ இந்நிலம் இரண்டரையும், சூரலூர் கூற்றத்து சூரலூர் கிழவன் கம்பன் மணியநாத, விக்ரமசிங்கமூவேந்த வேளான், இத்தேவர் சித்திரைத் திருநாள் ஒன்பது நாளும் பிராமணரும், சிவயோகியரும், தபஸ்யரும் உண்ண இவன் இந் நிலன் பூத்திவச்சிக்கொள்ளப் பெறுவானாக, விற்றுக் கொடுத்த நிலத்துக்கிசைந்த கீழ்பாற் கெல்லை, திருவரங்க தேவதானம் (கோட்டிடையும்) பஞ்சகத்து நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை நக்கன் மூங்குல முள்ளிட்டாரும், மேம்மட்டியும், நக்கன் கொற்ற விராடியுள்ளிட்ட நிலங்களுக்கு கிழக்கும், வட பாற்கெல்லை திருவரங்க தேவதானம் சாத்தங்குடிக்குத் தெற்கும் இவ்விசைத்த பெருநான் கெல்லையுளகப்பட்ட நிலம் இரண்டரையும் விற்றுக் கொடுத்த நிலத்துக்கு விலை 37 கழஞ்சா கரும்பொன் 85 கழைஞ்சுக்கும் இந்நிலம் $2\frac{1}{2}$ வேலியும் விற்றுக் கொடுத்து இப்பொன் எண்பத்தைந்து கழஞ்சும் பண்டாரத்து வைப்பித்துக்கொண்டு இந்நிலம் சித்திரைத் திருநாள் ஒன்பது, நாளும் பிராமணரும், சிவயோகிகளும், தபஸ்யரும் உண்ண இந்நிலம் இப்பரிசு கல்மேல் கொள்ளப்பெறு வாராக. சூரலூர் கிழவன் கம்பன் மணியநாத விக்ரமசிங்க மூவேந்தவேளானுக்கு விற்றுக்கொடுத்தோம்."

2. அதே வரிசையில் கடைசித் தூணில் 9-வது நூற்றாண்டில் ஆண்ட பாண்டியாதிபதி மாறன்சடையன் என்னும் வரகுணனையும், திருமலைப்பெருமான் அடிகளின் கோவிலையும் பற்றிய கல்வெட்டு. இது அரசனுடைய பட்டத்தின் 4-வது ஆண்டில் ஏற்பட்டது.

3. குகையின் கிழக்குச்சுவரில் வாயிலுக்கு வலது புறம் மேற்சொல்லிய **வரகுண பாண்டியன்** பொன்காசு தானம் செய்த சாசனம்.

4. மாதுர்பூதேஸ்வரர் கோவிலில் ஓர் பாறையில் விஜய நகர வம்சத்தைச் சேர்ந்த **வெங்கடதேவ மகாராயர்** சகம் 1539-ம் ஆண்டில் வீரப்ப நாயக்கர் நற்கதியடையும் பொருட்டுச் செய்த தான சாசனம்.

இவற்றுள் மூன்றாவதைத் தவிர மற்றவை சிதைந்துள்ளன.

7 மண்டபங்கள்

கோயிலின் அடியிலிருந்து படிக்கட்டின் மேலிடம் கல்லால் ஒட்டப்பெற்றுள்ளது. இக்கோவிலில் ஆயிரக்கால் மண்டபம், வாகனமண்டபம், சகஸ்திரலிங்க மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், சித்திரமண்டபம், பதினாறுகால்மண்டபம், மணிமண்டபம், முதலிய மண்டபங்கள் உண்டு. இவற்றுள் ஆயிரக்கால் மண்டபம் இருந்த இடத்தில் தற்போது கடைகள் உள்ளன. நூற்றுக்கால் மண்டபத்துக்கு மேல் வலப்பக்கத்தில் உள்ள சகஸ்திரலிங்க மண்டபத்தில் பல லிங்கங்கள் உள்ளன. இம்மண்டபங்கள் பல மன்னர்களாலும், அபிமானிகளாலும் வெவ்வேறு காலங்களில் கட்டப்பட்டவை.

(1) வாகன மண்டபம்

இது கோயிலுக்கு முன்னே மேல் புறத்தில் உள்ளது. இதில் **ஆத்தான மண்டபம்** என்னும் பெயருடன் ஓர் சலவைக்கல் மண்டபம் உள்ளது. இதைப் பூவாளூர் **தியாகராஜ செட்டியார்** என்பவர் கட்டுவித்ததாகப் பின் வரும் செய்யுளால் தெரியவருகிறது.

" அன்றியுந் தென்கயிலைஎனுந் திரிசிராப்பள்ளியிடையாகசாலை
முன்றயங்குமண்டபத்திலாத்தான்மண்டபமென்முதற்பேர்பூண்டு
மின்றயங்கு மரகதத்தாலியற்றிய தென்றேயெவரும்
விரும்பச்செய்தான்
பொன்றயங்கு மணிபுனைந்த தியாகராசப்பெயர்கொள்புல
வரேறே"

இம்மண்டபத்தில் கோயிலுக்குரிய பல வாகனங்கள் உள்ளன. இதிலிருந்து மூர்த்திகள் அலங்காரத்துடன் வாகனங்களில் புறப்படும். இதற்கு எதிரில் யாகசாலை மண்டபம் உள்ளது.

(2) நூற்றுக்கால் மண்டபம்

கோவிலுக்குச் செல்லும் வழியில் இடது பக்கத்தில் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. மண்டபத்தின் நடுவில் அழகாக அமைக்கப்பட்ட ஓர் சலவைக்கல் மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில், சித்திரை மாதத்தில் நிகழும் பிரமோற்சவத்தின் 5-ந் திருவிழாவில் செட்டிப்பெண் மருத்துவ வைபவமும், 6-ந் திருவிழாவில் திருக்கல்யாண வைபவமும் 14-வது திருவிழாவில் தாயுமான அடிகள் உற்சவ வைபவமும் நிகழும். இதில் சைவசமயப் பிரசங்கங்களும், சங்கீதக் கச்சேரிகளும் அவ்வப்போது நடைபெறும்.

மேலும் மார்கழிமாதத்தில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் விளக்கம் தக்க அறிஞர்களைக்கொண்டு கோவிலின் ஆதரவிலும், மௌனமடம் ஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் துணையிலும் நடைபெறுகிறது.

இவையன்றி ஸ்ரீ தாயுமானவர் தமிழ் இலவச வகுப்பின் ஆதரவில் இந்நூல் ஆசிரியர் திருக்குறள் முதலிய பாடங்களை நடத்திவந்தார்.

இம்மண்டபத்தில் தேவஸ்தான காரியாலயம் உள்ளது.

(3) சித்திரமண்டபம்

மலைமேல் கோயிலில் சுவாமி சந்நிதிக்குப்போகும் வழியில் சித்திரமண்டபம் ஒன்று உள்ளது. இது அம்மன் கோவிலுக்கு மேலே மாடிக்கட்டிடமாக (Terraced) அமைந்துள்ளது. இதில் புராணத்தைத் தழுவிய பல சரித்திரங்களும், சிவபெருமானுடைய பலவேறு வடிவங்களும் வேறுபல சித்திரங்களும் பல வர்ணங்களில் அழகுடன் வரையப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் அழகிய வேலைத்திறம் பொருந்திய கற்சிற்பங்கள் உள்ளன. கல் வளையங்களும், சிங்கத்தின் வாயிலிருந்து எடுக்கப்படமுடியாத கற்பந்துகளும், அழகிய வடிவங்கள் அமைந்த தூண்களும் பார்ப்பவர்கட்கு வியப்பை அளிக்கும். இம்மண்டபத்தைத் **துரையூர் ஜமீன்தார்கள்** செப்பனிட்டதாகவும், அதற்கு அறிகுறியாக ஜமீன்தார்களின் உருவங்கள் அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தில் நடராஜர் அபிஷேகங்களும், வேறு பல உற்சவங்களும் வழக்கப்படி நிகழும்.

(4) பதினாறுகால் மண்டபம்

உச்சிமலைக்குப் போகும் வழியில் வலப்பக்கத்தில் பதினாறுகால் மண்டபம் ஒன்றுண்டு. இது **தளவாய்** முதலியாரால் சுமார் 1630-ல் கட்டப்பெற்றது. இவ்விடத்தில் **வசந்தோற்சவம்** நடைபெறும். கோடைக்

காலத்தில் இனியதென்றல் வீசும். கீழவீதியில் தளவாய்க் குளம் என்ற ஓர்குளமும் உண்டு.

(5) மணிமண்டபம்

பதினாறுகால் மண்டபத்துக்கு மேலே உள்ள மணி மண்டபம் காலஞ்சென்ற உறையூர் வணிகச்செல்வர் **உலகநாத செட்டியார்** அவர்களின் முயற்சியாலும், நகர மாந்தரின் உதவியாலும் 1918-ல் அமைக்கப்பட்டது. இதில் கட்டப்பட்ட மணி 2½ டன் கனமும், 4 அடி 8 அங்குலம் நீளமும், 4 அடி 6 அங்குலம் குறுக்களவும் கொண்டது. இது நாகைப்பட்டினம் ரயில்வே தொழிற்சாலையில் செய்யப்பட்டு இவ்வூருக்குக் கொண்டுவரப்பெற்றது. தினந்தோறும் காலைமுதல் 4, 6, 10, 12, மாலை 6, 10 மணி நேரங்களிலும் விசேட நாட்களிலும் மணி அடிக்கப்படுகிறது.

8 உச்சிப்பிள்ளையார் கோவில்

மலைக்கோவிலின் உச்சியில் பிள்ளையார் கோவில் ஒன்று உண்டு. இதைக்குறித்து ஓர் கதை வழங்கப்படுகின்றது. விபீஷணன் இராமரிடம் விடைபெற்றுத் தெற்கே வரும்பொழுது உடன் கொண்டுவந்த அரங்கநாதரின் சிலையை, பிராமண உருவங்கொண்டு நின்ற விநாயகரிடம் கொடுத்து வெளியே சென்றான். விநாயகர் சிறிது நேரம் வைத்திருந்து அவ்விக்கிரகத்தைப் பூமியில் வைத்துவிட்டு ஓடி வந்து மலைமேல் அமர்ந்தார். விபீஷணன் விக்கிரகத்தை எடுக்கப்பார்த்து முடியாமற்போக, பிராமணச் சிறுவனைத் துரத்திக்கொண்டு வந்து பார்க்க ஒருவரையுங்காணாமல் விநாயகர் தலையில் ஓங்கிக்குட்டியதாகவும், அரங்கநாதர் ஸ்ரீரங்கத்தில் தங்கிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. விபீஷணன் பெருமாளை எடுத்துவந்ததைக் காட்டும் சிலை 16 கால் மண்டபத்தில் ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளது.

உச்சிப்பிள்ளையார் கோவிலைச் சுற்றிலும் பிரகார மண்டபம் ஒன்றுள்ளது. இவ்விடத்தில் இருந்து காணும் காட்சி கண்கொள்ளாக் கவின்பெறு காட்சியாகும். ஆகாய விமானத்திலிருந்து பார்ப்பதுபோல் தோன்றும். நகரத்தின் நான்கு பக்கங்களிலும் தோன்றும் ஆறுகளும் சோலைகளும் செறிந்த இயற்கைக் காட்சிகளும், செய் குன்றுக்கட்டிடங்களும் கண்களுக்கு விருந்தளிக்கும். இம் மலை பூமியிலிருந்து உச்சிப்பிள்ளையார் கோவில் வரையில் 273 அடி உயரமுள்ளது. 417 படிகளைக்கொண்டது. தாயுமானவர் உட்கோவில் வாயில் வரை 172 படிகள் உள்ளன. குன்றின்மேல் இட்ட மின்சார விளக்கு இரவில் நீலமணியெனத் திகழ்கின்றது. நெடுந்தூரத்திலுள்ளார்க்கும் மலை பகலிலும், விளக்கு இரவிலும் காட்சியளிக்கின்றன. உற்சவகாலங்களில் மின்சார விளக்குகளால் உச்சிமலை அலங்கரிக்கப்படுகிறது.

9. மௌன மடம்

கோவிலுக்குச் செல்லும் வழியில் யாகசாலைக்குமேல் வலது பக்கத்தில் ஸ்ரீ தாயுமானஅடிகளின் குருவாகிய ஸ்ரீ மௌனசுவாமிகள் காட்சி தந்த இடம் ஒன்று உள்ளது. இது சிறிய வாயிலைக்கொண்டு உள்ளே பெரும் பகுதியான இடங்களைக்கொண்டு பெரியோர்களின் அடக்கத்திற்குச் சான்றாக விளங்குகின்றது. இதில் ஸ்ரீ தாயுமான அடிகள் காலத்திலிருந்து பல தம்பிரான்கள் பல பட்டங்களிலிருந்து கோயிலுக்குத் தொண்டு செய்து வந்திருக்கிறார்கள். இது திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனத்துக்கு உட்பட்டு தற்போது மௌனம் ஸ்ரீ ராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் இக்கோவில்

கட்டளைக் காரியங்களைக் கவனித்து வருவதுடன் சமயப் பணியும் செய்து வருகிறார்கள்.

10. பூசித்துப் பேறு பெற்றோர்

இத்தலத்தில் உள்ள பெருமானை வழிபட்டுப்பேறு பெற்றோர் பலர் ஆவர். அவர்களுள், பிரமன், அகஸ்தியர், இந்திரன், உமாதேவி, ஜடாயு, சப்தரிஷிகள், திரிசிரன், இராமர், அர்ச்சுனன், அநுமான், விபீஷணன், தேசுமிக்க ஐயனார், நாககன்னிகைகள், சாரமாமுனிவர், வண்டு, சோழன், இரத்தினவதி, மௌனகுரு, தாயுமான அடிகள் முதலியோர் சிறப்புடையோர் ஆவர். இவர்களுடைய சிலாவடிவங்கள் தனியே அம்மன்கோவிலுக்குப் போகும் வழியில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. அநுமார் பூசித்ததற்கு அறிகுறியாக இக்கோயிலில் அநும முத்திரை இடப்படுகின்றது.

11. தினப்பூஜையும் திருவிழாக்களும்

இக்கோவிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு என்னும் நான்கு காலங்களிலும் அபிஷேக தீபாராதனைகள் நடைபெறுகின்றன. காலை, இரவுப் பூஜை இரண்டும் சர்க்கார் வருமானத்திலிருந்து நடைபெறுகின்றன. உச்சி, மாலைப்பூஜை இரண்டும், தருமபுர ஆதீனத்து மேற்பார்வையில் நிகழ்வன. ஆண்டுதோறும் சித்திரை, பங்குனி மாதங்களில் முறையே தேர்த் திருவிழாவும், தெப்பத் திருவிழாவும் நிகழ்கின்றன. அன்றி சித்திரை வைகாசியில் மலைமேல் வசந்தோற்சவங்களும், ஆடிமாதத்தில் அம்மனுக்குத் தனியே ஆடிப்பூர உற்சவமும் நடைபெறுகின்றன. இவையன்றி நவராத்திரி விழா, கந்தர்சஷ்டி விழா முதலியனவும் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன.

12. திருப்பணிகள்

இக்கோயிலில் உள்ள பல மண்டபங்களும், பிற கட்டிடங்களும் வெவ்வேறு காலங்களில் அவ்வப்போது இருந்த மன்னர்களாலும், பிறராலும் கட்டப்பட்டனவாகத் தெரிகிறது.

முற்காலத் திருப்பணிகள்

எண்	மண்டபங்கள்	திருப்பணி செய்தவர்	காலம்
1	மூலஸ்தான கர்ப்பக்கிருகம் மகாமண்டபம்	திரிசிரன்	6-வது நூற்றுண்டுக்கு முன்
2	சுற்று மண்டபங்கள்	கண்டிய மகாராஜன்	
3	மூலலிங்கத்துக்கு முன் மண்டபம்	சூரராக்கசோழன்	,,
4	கம்பத்தடிவரையுள்ள மண்டபங்கள்	மகாபலி	,,
5	உச்சிப்பிள்ளையார்கோயில் சகஸ்ரலிங்கர் கோயில் அம்மன்கோயில்	கரிகால்சோழன்	,,
6	வன்னியடிக்குத் தென்வாயில்	பிரபுடதேவராயர்	,,
7	மேல் குகைக்கோயில் கீழ்க் குகைக்கோயில்	மகேந்திரபல்லவன்	6-வது நூற்றுண்டு
8	கம்பத்தடி மண்டபம்	திருமலைசவுரிநாயக்கர்	16-வது நூற்றுண்டு
9	நூற்றுக்கால் மண்டபம்	பெரியவீரப்ப நாயக்கர்	,,
10	கோடைக்கொலு மண்டபம்	தீக்ஷப்பய்யர்	,,
11	கொட்டாரமண்டபம்	விஜயரெங்கசொக்கநாத நாயக்கர்	,,

Q25:38, 21192.7 N52-4

12	ஆயிரக்கால் மண்டபம் (தற்போது மலைவாசல் கடைகள்)	அநுப்பி என்னும் கணிகை	17-வது நூற்றுண்டு
13	பதினாறுகால் மண்டபம்	தளவாய் முதலியார்	1630
14	பன்னிருகால் மண்டபம் (சித்திரமண்டபம்)	காமாட்சி நாயக்கர்	17-வது நூற்றுண்டு
15	நவராத்திரி கொலுமண்டபம்	துரையூர் ஜமீன்தார்	
16	சித்திர மண்டபம்		,,
17	வடபுறம் மதிலுக்குக் கீழ் உள்ள கருங்கல் திம்மி	ஸ்ரீசிதம்பரநாதத் தம்பிரான் 5-வது பட்டம்	,,
18	தீயால் சேதமடைந்த மண்டபங்களின் திருப்பணிகள்	ஸ்ரீ வைத்திலிங்கத் தம்பிரான் 7-வது பட்டம்	1772
19	கம்பத்தடி மண்டபம் உள்வாயில்	,,	18-வது நூற்றுண்டு
20	மூலலிங்கத்திற்கு ஆவுடையாரும் விமானத்திற்குத் தங்கமுலாமும்	ஸ்ரீ சிதம்பரநாதத் தம்பிரான் 10-வது பட்டம்	,,

இக்குறிப்புகள் : (திரு. S. திருநாவுக்கரசுப் பிள்ளை அவர்கள் எழுதிய 'திரிசிராமலைக்கோயில் மகிமை' என்னும் புத்தகத்திலிருந்து சேர்க்கப்பெற்றன.)

1284

பிற்காலத்திருப்பணிகள்

1888-ம் ஆண்டில் உச்சிமலைக்குப் போகும் வழியில் இருந்த பெரியபள்ளம் தூர்க்கப்பட்டும், மேல்தளங்கள் தட்டோடு போடப்பட்டும், சித்திர மண்டபத்தில் வர்ணச் சித்திரங்கள் எழுதப்பெற்றும் அறுபத்துமூவர் தல அடியார்களுக்குக் குறடுகள் கட்டப்பட்டும், துவஜஸ்தம்பத்துக்குச் செப்புத்தகடுகள் போடப்பட்டும், மற்றும் பல திருப்பணிகளும் செய்யப்பட்டு 1899-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பிறகு களவுபோய்ப் பழுதுபட்ட சுவாமிகோயில் தங்கவிமானம் புதுப்பிக்கப்பட்டு 1907-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பிறகு 1918-ல் மணிமண்டபம் அமைக்கப்பட்டது.

1923-ம் ஆண்டில் மின்சாரவிளக்கு அமைக்கப்பட்டு கனந்தங்கிய ராஜப்பிரதிநிதி ரீடிங் பிரபு அவர்களால் 7-12-1923-ல் மின்சாரத்திறப்புவிழா நடைபெற்றது. நாட்டரசங்கோட்டை அரு. சு. வே. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்களின் பெருமுயற்சியால் கோவிலில் சித்திரங்கள் முதலிய திருப்பணிகளும், மலைவாசலில் புதிய கோபுரமும் அமைக்கப்பெற்று 13—6—1927-ல் கும்பாபிஷேகம் மிக விமரிசையாய் நடைபெற்றது. 1936-ல் மலைவாசல் ஸ்ரீமாணிக்கவிநாயகர்கோயில் திருப்பணி செய்யப்பட்டது. 1941-ல் கீழிருந்து மேல்வரையில் படியேறும் அன்பர்கள் சௌகரியத்திற்கு கைப்பிடியாக இரும்புக் குழாய்கள் பொருத்தப்பெற்றன.

பிறகு 1944-ல் திருப்பணிக்குழு (Committee) ஏற்படுத்தப்பட்டுக் குழுவினரின் மேற்பார்வையில் கோபுரம், விமானங்கள் முதலியவைகட்குப் புது நிறங்கள் கொடுக்கப்பட்டன. உச்சிமலை விமானத்துக்குச் செல்லும் வழி கல்லால் புதுப்பிக்கப்பட்டது. தங்கக்கலசங்களில் சிதைந்த இடங்கள் பழுதுபார்க்கப்பட்டன. மூலமூர்த்திகட்கு மருந்து சேர்க்கப்பட்டது. முன் வாகன மண்டபத்தில் பஞ்சமூர்த்திகளின் உருவங்கள் சுதைவேலையில் புதிதாய் அமைக்கப்பெற்றன. மாணிக்க விநாயகர் கோயிலின் பிரகாரம் விரிவு செய்யப்பெற்று மேல்தளம் புதுப்பிக்கப்பெற்றது. இவ்வாறுகத் திருப்பணிகள் நடைபெற்று சுபானு ஆண்டு தை-மீ 18-ந்தேதி 31—1—1944 திங்கட்கிழமை அஷ்டபந்தன கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

13. சொத்துக்கள், நிலம், வீடு முதலியன

இந்த ஜில்லாவில் சோழமாதேவி, வேங்கூர், கொக்கரசம்பேட்டை, தோகூர், மருதாண்டாக் குறிச்சி, பனைய

புரம், தேவதானம், சோழங்கநல்லூர், கம்பரசம்பேட்டை, முதலிய கிராமங்களில் கோவிலுக்குரிய நன்செய் நிலங்கள் உள்ளன.

பெரியகடை வீதியில் சுமார் 20 கடைகளும் மலைக் கோட்டை உள் வீதியிலும் வெளியிலும் சில காலிநிலங்களும் வீடுகளும் உள்ளன. மௌனமடம் கட்டளை விசாரணையில் கோயிலின் கட்டளைக்குச் சொந்தமான நஞ்சை புஞ்சை கிராமங்களும், திருச்சி டவுனில் வீடுகளும் நிலங்களும் உள்ளன. மேலும் கோயிலுக்கும் மௌனமடம் கட்டளைக்கும் உரிய பல வாகனங்களும் எடுபிடிகளும் உள்ளன.

14. நகைகள்

சர்க்கார் வசத்திலும் மௌனமடத்தின் வசத்திலும் காலக்கிரயப்படி சுமார் லக்ஷ ரூபாய் மதிப்புள்ள நகைகள் உள்ளன.

15. வருட வருமானம்

வருடத்தில் சர்க்கார் மூலமாய் மோகினித்தொகையாக சுமார் ரூ. 50000 மும் மௌனமடத்தின் மூலமாய் சுமார் ரூ. 35000 மும் கிடைக்கின்றன.

16. சுற்றுக்கோயில்கள்

இக்கோவிலைச் சேர்ந்த சுற்றுக் கோயில்கள் தேசுமிக்க ஐயனர் (நயினர்) கோவில், பிடாரி கோவில், அனுமார் கோவில், நந்திகோவில், மாணிக்கவிநாயகர் கோவில் முதலியன. மலைவாசல் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் பிரத்தியட்ச மூர்த்தியாய் விளங்கி, வேண்டுவார்க்குச் சகல பேறுகளையும் அளித்து வருகிறார்.

17. ஆலய நிர்வாகம்

இக்கோவில் 1939-ம் வருடம் முதல் தற்போது புதுப் பிக்கப்பெற்ற சென்னை இந்துமத தர்ம பரிபாலன பாது

காப்புப் போர்டு (Hindu Religious & Charitable Endowments Board) நிர்வாகத்திற்குட்பட்டு நிர்வாகத் தலைவர் (Executive Officer) மேற்பார்வையிலும் தர்ம கர்த்தாக்கள் மேற்பார்வையிலும் கோயில் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

18. இத்தலத்திற்குரிய தேவாரமும், பிற தனிப்பாடல்களும்

(1) திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரப்பதிகம் ஒன்று. 11 செய்யுட்கள் அடங்கியது.

1. நன்றுடை யானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் னுள்ளங் குளிருமே.

2. தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்த னலமிகுபாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடு மன்னி வாழ்வாரே.

(2) திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருக்குறுந் தொகை :—

1. மட்டு வார்குழ லாளொடு மால்விடை
யிட்ட மாவுகந் தேறு மிறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னரு ளேசெயுஞ்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே.

2. அரிய யன்றலை வெட்டிவட் டாடினார்
அரிய யன்றொழு தேத்து மரும்பொருள்
பெரிய வன்சிராப் பள்ளியைப் பேணுவார்
அரியயன்றொழ வங்கிருப் பார்களே

3. அரிச்சி ராப்பக லேவரா லாட்டுண்டு
சுரிச்சி ராதுநெஞ் சேயொன்று சொல்லக்கேள்
திருச்சி ராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சிராது நடக்கு நடக்குமே.

4. தாயு மாயெனக் கேதலைக் கண்ணுமாய்ப்
பேய னேனையு மாண்ட பெருந்தகை
தேய நாதன்சி ராப்பள்ளி மேவிய
நாய னாரென நம்வினை நாசமே.

(3) ஐயடிகள் காடவர்கோன் இயற்றிய க்ஷேத்திரத் திரு வெண்பா :—

கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடலிரா வண்ணம்—அழிந்த
திராமலையா கொண்டுபோ வென்னுமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்.

(4) பொய்யா மொழிப்புலவர் பாடல்கள் :—

1. கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுத்துக்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை.

2. அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்கமிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே.

தனிப்பாடல் :—

3. முலையுங்குழலு முளைப்பதற்கு முன்னே
கலையும் வளையுங் கழன்றாள்—மலையிற்
சிராப்பளியா னேறிவருஞ் சேவின்மணி யோசைக்
கிராப் பளியுங் கொள்ளா ளிவள்.

(5) மூவரம்மானையில் ஓர் செய்யுள் :—

சிரபுர மாவீசர் செட்டிமகட் காவேடம்
தரித்து மருத்துவஞ்செய் தாயானு ரம்மானை
தரித்து மருத்துவஞ்செய் தாயானு ராமாயின்
மருத்தெண்ணெய்ச் சிக்கன்றி மணமிவர்க்கே தம்மானை
மட்டுவார் குழலிருக்க மணமரிதோவம்மானை.

(6) திருவாசகப்பாடல்கள் :—

'சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி.'

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றாதாய் கோத்தும்பீ.

(7) தாயுமான அடிகள் பாடிய பாடல்கள் :—

1. அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாச மாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்த தெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்த தெது மன வாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவ ழக்காய்
யாதினும் வல்ல வொரு சித்தாகியின் பமாய்
என்றைக்கு முள்ள தெது மேல்
கங்குல்பகலற நின்ற எல்லையுள தெது அது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலா மோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம்.

2. எடுத்ததேகம் பொருளாவி மூன்றுநீ
யெனக்கொன் றில்லையென மோன நன்னெறி

கொடுத்தபோது கொடுத்தன் ரூபினும்
குளறி நானென்று கூத்தாட மாயையை
விடுத்த வாறுங்கண் ணீரொடு கம்பலை
விலகு மாறுமென் வேட்கை ப்ரவாகத்தை
தடுத்த வாறும் புகலாய் சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே.

3. நோயும் வெங்கலிப் பேயுந் தொடரநின்
நூலிற் சொன்ன முறையிய மாதிநான்
தோயும் வண்ண மெனைக்காக்குங் காவலும்
தொழும்பு கொள்ளுஞ் சுவாமியு நீகண்டாய்
ஓயுஞ்சன்ம மினியஞ்ச லஞ்சலென்று
உலகங் கண்டு தொழவோ ருருவிலே
தாயுந் தந்தையுமானாய் சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே.

4. தந்தை தாயுநீ யென்னுயிர்த் துணையுநீ
சஞ்சல மது தீர்க்க
வந்த தேசிக வடிவுநீ யுனையலால்
மற்றொரு துணை காணேன்
அந்த மாதியு மளப்பருஞ் சோதியே
ஆதியே யடியார்தம்
சிந்தை மேவிய தாயுமானவ னெனும்
சிரகிரிப் பெருமானே.

5. ஐவகையெனும் பூத மாதியை வகுத்ததனு
ளசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
யாதி நூலையும் வகுத்துச்
சைவமுத லாவளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீ யுன்னை நானணுகவும்
தண்ணருள் வகுக்க விலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவிற்

போதபரிபூரண வகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்ற பொருளே
தெய்வமறை வடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணு மூர்த்தியே
சின்மயானந்த குருவே.

6. ஐந்துவகை யாகின்ற பூதமுதல் நாதமும்
அடங்க வெளி யாக வெளி செய்
தறியாமை யறிவாதி பிரிவாக அறிவார்கள்
அறிவாக நின்ற நிலையில்
சிந்தை யற நில்லென்று சும்மா இருத்தி மேல்
சின்மயா னந்த வெள்ளந்
தேக்கித் திளைத்து நான் அது வாயிருக்கநீ
செய்சித்ர மிக நன் றுகாண்
எந்தைவட வாற்பரம குரு வாழ்க வாழஅரு
ளியநந்தி மரபு வாழ்க
என்றடியர் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென்னவே
வந்தகுரு வேவீறு சிவஞான சித்தி நெறி
மௌ னேப தேச குருவே
மந்த்ர குரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில் வரு மௌன குருவே.

7. எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறென் றறியேன் பராபரமே.

8. எத்திக்கும் தானுகி என்னிதயத் தேயூறித்
தித்திக்கும் ஆனந்தத் தேனே பராபரமே.

(8) அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் :—

தரையின் மானுட ராசையி னுல்மடல்
எழுது மாலருள் மாதர்கள் தோதக
சரச மாய்மல ரோதியி னுலிரு கொங்கையாலும்

சதிசெய் நூலிடை யாலுடை யால்நடை
அழகி னல்மொழி யால்விழி யால்மருள்
கவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ
பறவை யானமெய்ஞ் ஞானிகள் மோனிகள்
அணுகொ ணுவகை நீடுமி ராசிய
பவன பூரக ரேசக மாகிய விந்துநாதம்
பகரொ ணுதது சேரவொ ணுதது
தினையொ ணுதது வானத யாபர
பதிய தானச மாதிம னேலயம் வந்துதாராய்
சிறைவி டாதநி சாசரர் சேனைகள்
மடிய நீலக லாபம தேறிய
திறல்வி நோதச மேளத யாபர அம்புராசித்
திரைகள் போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீரகு றிஞ்சிவாழும்
மறவர் நாயக ஆதிவி நாயக
இளைய நாயக காவிரி நாயக
வடிவி ளுயக ஆனந்த ளுயக எங்கள்மானின்
மகிழு நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயக னர்குரு நாயக
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே.

(9) சிராமலைநாதர் அடைக்கலப்பதிகம் சோமசுந்தர முதலியார் இயற்றியது.

சைவர்க் குரிய செந்தமிழ்வே தத்தை யென்றுஞ் சாற்றியே
மெய்வைத் தருளு மம்மறையை விதித்த கருமங்களிலோதுந்
தெய்வத் திருமந் திரமாகத் தெளிந்தே கருமங்களை முடித்தல்
உய்யத் தக்கதென்ற சிராமலையா யுன்ற னடைக்கலமே.

(10) ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் சிந்தனைப்பதிகம் :—

மனமே யுனையான் வேண்டுகின்றேன்
மன்னு புலன்க ளெறிசெல்லா

தினமா மன்பர் பாலினிற்சென்
றினிதர் யிறைவி பணியியற்றிக்
கனமார் திரிசி ராமலேயிற்
கருணைக் கடலாய் வீற்றிருக்குந்
தனமார் மட்டு வார்குழனற்
றுயின் மலர்த்தாட் சிந்திப்பாம்.

(11) திருக்குருகூர் ஸ்ரீ ஞானசித்த சுவாமிகள் பாடிய பாடல்கள் :—

1. ஆவிக்காவிய தாயடியார்பால்
அளவிடாச் செயலனைத்தையுங் காட்டி
கோவிலாக என்மனத்தினுள் புகுந்தோன்
குற்றம் யாவையும் குணமெனக்கொண்டோன்
தேவிமட்டுவார் குழலியோடுவந்து
திருச்சிராப்பள்ளி யென்றிடு மலேமேல்
மேவிவாழ்ந்திடும் தாயுமானவன்றன்
விரை மலர்ப்பதம்வேண்டு கின்றேமே.

2. சைவப்பழம் பொருளே என் சிராப்
பள்ளிச்சற்குருவே
ஐவர்க்குள்ளாகிப்படும் பாடனைத்தும்
அறிந்திருந்தும்
நைவுற்ற ஏழைக்கிரங்காதிருப்பதை
நாடிலெனைக்
கைவிட்டிடுங் கருத்தோ என்னையோ
என்றுகன்றுவனே.

19. தனி நூல்கள்

(1) செவ்வந்திப் புராணம் என்னும் திரிசிரமலைப் புராணம் சைவ எல்லப்ப நாவலர் இயற்றியது. 11 சருக்கங்கள் அடங்கியது. 550 பாடல்கள் கொண்டது.

செவ்வந்தி விநாயகர்

1. அருளெனுங் கடல்முகந் தடியர் சிந்தையாம்
பொருள்பெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழை யுதவுசெவ் வந்தி யானையின்
றிருவடி யிணைமலர் சென்னி சேர்த்துவாம்.

முருகக்கடவுள்

2. ஓகையாற் றிரைமுன் னுளி லுழக்குமா வினையும் வாட்டு
மேகவெவ் வரையினெல்லை யிடித்திடு மிமையோர் போற்றத்
தோகைமே லுலவுங் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை.

செவ்வந்திப்பெருமான்

3. சொற்கொண்ட கிளியனையா ரனங்கனுக்குத்
துணையாகத் துணைப்பு ரூர
விற்கொண்டு விளையாடுந் திரிசிரா
மலையிலுறை விமலன் றன்னைப்
பொற்கொண்ட நிறத்தானுங் கரியமுகி
னிகர்வானும் புலரா வண்ண
மற்கொண்ட மிடற்றானைச் செவ்வந்திப்
பெருமானை யகத்திற் சேர்ப்பாம்.

மட்டுவார்குழலம்மை

4. பனிகொள் வரையிற் பிறந்தபிடி
பரனா ரிடத்திற் படர்ந்தகொடி
முனிவ ரிமையோர் மகிழவற
முப்பத் திரண்டும் வளர்த்தருளும்
வனிதை வடிவே லனைப்பயந்த
மடந்தை மட்டு வார்குழலாள்
இனிய பதமா மிருபோதுந்
தலைமேற் றரிப்பா மிருபோதும்.

(2) கலித்துறை யந்தாதி. இது 104 செய்யுட்களைக் கொண்டது. மலைமேலுள்ள குகைக் கோவிலில் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. வேம்பையர்கோன் நாராயணன் என்பவரால் இயற்றப்பட்டது.

1. நெஞ்சந் துணையுண்டு நீர்நிலத் துண்டு நிழலுமுண்டு
தஞ்சப் பெருக்குள தானஞ் சிராமலைச் சாரலுண்டு
துஞ்சுந் துணையுஞ் சிவனைத் தொழுது துறக்கமெய்தார்
பஞ்ச நலியப் பலிதிரி வார்சிலர் பாவியரே.

2. பொய்யினைப் பேசிப் பொருளினைத்
தேடிப் புழுப்பொதிந்த
மெய்யினைக் காத்து வெறுத்தொழிந்
தேன்வியன் பொன்மலைமேல்
ஐயனைத் தேவர்தங் கோனையெம்
மானையம் மான்மறிசேர்
கையனைக் காலனைக் காய்ந்த
பிரானைக் கழல்பணிந்தே.

(3) சிராமலைக்கோவை. மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்தது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தாயாகி வந்தொரு பேதையைக் காத்த தனிமுதலோன்
வேயான தோளுமை பாகன் சிராமலை மேவிவளர்
பாயாத வேங்கை பயிலும் புனத்துப் பவளவுரு [குழலே.
வாயாகும் வேங்கையைக் கண்டேன்வண் டேன்முரல் வார்

(4) சிரகிரி உலா. இந்நூல் கிடைக்கவில்லை. சில கண்ணிகள் மட்டும் உள்ளன.

...............மட்டுவார் குழலாம்
நல்லாளோடின்ப நகைமேவிச் சொல்லார்ந்த

மூவர் முதலோர் முழுத்தமிழு மன்புடையார்
யாவர் தமிழு மணிந்தருள்வோன் - ஆவியாய்
அத்தனு மாவதன்றி யன்னையுந்தா னையபிரான்
சித்த மகிழ்தென் சிரகிரியான் – சுத்த
நிலாவும் பகீரதியு நீண்ட சடைமேல்
உலாவவே போந்தா னுலா.

(சிராமலைக்கோவை.)

(5) திரிசிரபுரம் மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய யமக அந்தாதி.

திருமா திருக்குமணி மார்ப னான்முகன் றேவர்செங்க
திருமா திருக்குந் தொழநின்ற நாயகன் றீவினைமு
திருமா திருக்கு மடியார்க் கறுக்குஞ் சிராமலையான்
திருமா திருக்கு நுதலான் பொற்றாளென் சிரம்வைப்பனே.

(6) ஸ்ரீமாத்ருபூதேஸ்வரசதகம், ஸ்ரீ தர வெங்கடேசுவர அய்யாவாள் அவர்கள் இயற்றியது.

॥ मातृभूतशतकम् ॥

1. श्रयांसि यं सकृदनुस्मरतां जनाना
मविर्भवन्ति सुमहान्त्यनपायवन्ति ।
तं त्वामनन्यशरणः शरणं व्रजामि
श्रीमातृभूत शिवपालय मां नमस्ते ॥

கருத்துரை :-

எந்த ஈச்வரனை நினைத்த ஜனங்களுக்கு அபாயமற்றதான அதிக ச்ரேஸ்ஸை உண்டாக்குகிறதோ அந்த ஈச்வரனை வேறு தெய்வத்தை கதியாக அடையாமல் சரணமடைகிறேன். மாத்ருபூதேச்வரரே, என்னைக்காப்பாற்றும். உமக்கு நமஸ்காரம்.

2. मन्दस्मितैः करुणया शिशिरैः कटाक्षैः
प्रेमातिरेकमधुरैरपि चाभिलापैः ।
आनन्दयिव्ययि कदा न सहाम्बयात्वं
श्रीमातृभूत शिवपालय मां नमस्ते ॥

கருத்துரை :-

புன்சிரிப்போடும் அன்பு நிறைந்த கடாக்ஷங்களோடும் அன்புமிகுதியினல் இனிமையான சொற்களாலும் அம்பிகையோடுகூடநீர் எப்பொழுது என்னைச் சந்தோஷப் படுத்தப் போகிறீர். ஹே மாத்ரு பூதேச்வரரே என்னைக் காப்பாற்றும். உமக்கு நமஸ்காரம்.

3. मात्रा सुगन्धिकचया भवता च मित्रा
युक्तः प्रसूजनकहीन इवावसीदन् ।
अस्मीति वां जगदधीश्वरयोरयुक्तं
श्रीमातृभूत शिवपालय मां नमस्ते ॥

கருத்துரை :-

நல்ல வாசனைகொண்ட கேசபாசங்களோடு கூடின தாயோடும் தந்தையான உம்மோடும் கூடின நான் தாய் தந்தையற்றவன்போல் உலகத்திற்கு மாதா பிதாக்களான உங்களிடத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேன் என்பது பொருத்தமில்லை. ஆகையால் மாத்ருபூதேஸ் வரரே என்னைக் காப்பாற்றும். உமக்கு நமஸ்காரம்.

(7) அம்மன் திருக்கோயிலின் சலவைக்கற்களில் ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிய சௌந்தரியலகரிப் பாடல்கள் கிரந்தத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

இத்தலத்தைக் குறித்து அச்சிடப்பெறுத வேறு அந்தாதி நூல்களும், முத்துச்சாமி தீட்சதர் அருளிய கீர்த்தனைகளும் உள்ளன.

தேவஸ்தானத்தைச் சேர்ந்த நூல் நிலையம் ஒன்று மலைக் கோயில் முன் மண்டபத்தில் உள்ளது. இது திருப்பாதிரிப்புலியூர் 5-வது பட்டம் ஸ்ரீ ஞானியார் சுவாமிகளால் திறக்கப்பெற்றது. இதில் வேறு பல பத்திரிகைகளும் வருகின்றன. பலர்வந்து படித்துப் பயன் பெறுகின்றனர்.

வைய மின்புற மாதர்கற் போங்குக
செய்யகோலை யரசன் செலுத்துக
பெய்க வானஞ் சிவாலயம் பீடுற
சைவமென்னுஞ் சமயந் தழைக்கவே.

'சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி'

குறிப்பு :— இக்கோயில் வரலாற்றைப் பற்றிய ஆங்கிலப் பகுதி பின்னே உள்ளது.

(8) திரிசிராமலைக்கோவை:- திரிசிரபுரம் வித்துவான் அமிர்தம் சுந்தரநாத பிள்ளை அவர்கள் இயற்றியது

—o—

1. பூதலம் போற்றுஞ் சிராமலைத்
தாயான புங்கவற்குக்
காதலங் கோவை யுணிதமி
ழாற்சொலக் கான்மலிந்து
மீதல முட்டவ் வரைவாழ்செவ்
வந்தி விநாயகனார்
ஓதல ரும்மலர்த் தாளென்
னுளத்தோங்கு முண்ணிறைந்தே.

2. வல்லா ரொருநால்வர் தேற
முனநாள் வயங்குபெருங்
கல்லா லிருந்து முனம்யோகு
செய்த கடவுளமர்
நல்லா லயமாஞ் சிராமலை
யன்னவென் நல்லுயிரே
சொல்லா ரயலறி வாரென
வோமனஞ் சோருவதே.

3. வாழி திருசிர மாமலை
வாழி மகிழ்சிவன்ருள்
வாழி திருவுமை வாழி
மறைநான்கும் வாழிமழை
வாழி திருமன்னன் வாழி
திருத்தமிழ் வாழிநிலம்
வாழி திருசிர மாமலைக்
கோவையும் மாநிலத்தே.

சிராப்பள்ளிநாதர் திருவடி போற்றி.

Tiruchirapalli.

Tiruchirapalli has long been known in history as the Key of the Carnatic: even to-day it retains its title with undiminished fame. It is one of the great nerve centres of the Tamil country — look at it from any angle you like — Strategic, Political, Cultural, Religious. To the north of this historic town, and enclosed between the rivers Cauveri and Coleroon lies an island, in which there are two great temples of India — Srirangam and Jambukeswaram. Pilgrims from all over the country flock to this holy island, in several hundred thousands, during the annual *Ekadesi* festival.

There is a legendary account of how the Rock came to occupy its present position. There was a mighty contest once between Vayu, the God of the winds, and Adisesha, the great Serpent, as to who was superior in strength. The serpent coiled itself tightly round Maha meru, the great mountain, and defied Vayu to show his strength. And he blew a terrible storm without much effect at first. But by the grace of God he won in the end and blew away three big rocks from Meru. One fell at Kalahasthi, one fell here, and another at Trincomalee in Ceylon. Out of the Rock that fell here, temples were built at a later time: and the place itself became famous as the Kailas of the South.

How the name Trichinopoly came to the place is an interesting inquiry. It is a corruption of *Tiruchira-palli*, the town of Trisiras, the three-headed. Legend says that *Trisiras*, the three-headed cousin of Ravana

(king of Lanka, i. e. Ceylon) worshipped Lord Siva at this *place* (*palli*) : and hence the name. Perhaps he once held sway here. The place is called by the same name in a Sixth Century inscription. Some scholars say it is a corruption of Tiru*chilai*palli, Chilai meaning, stone, (i. e.) the Rock. Others say the name takes its origin from the three separate rock abodes of the God, the Goddess, and Ganesa on the top of all.

There is good evidence to show that the Pallava King Mahendravarman, who lived in the 6th Century A. D. was the builder of the temples on the rock. There are two cave temples cut into the rock, one beside the passage leading out to the flight of steps to Ganesha's shrine at the top, and the other at the North-western end of the street in front of the flight of steps from below. The upper cave temple is the more interesting of the two. On its walls there are inscriptions in Pallava *grantha* characters. There are also 104 stanzas in Tamil, inscribed on the walls. The author is one called Narayanan. Some of these stanzas have been included in this little book. Saint Sambandar and Saint Appar have also sung in praise of the Lord of this temple. One of Sambandar's psalms, which begins with the famous நன்றுடையானை (page 1) runs as follows :-

" All goodness hath he and no shadow of ill,
Grey white is his bull, fair Uma shares his form,
His grace is beyond words. Chirapalli's hill
Is His, whom to praise keeps my heart in thrill.

The rock is 273 feet high, with a flight of 417 steps, leading to the top, the major portion being

roofed over. Whether viewed from the South, the East or the North, it looks like an enormous brown bull, lying down with head lifted up in all its pride of strength, and bearing on its crest a small temple,—the shrine of Pillayar or Ganesa. That is why, perhaps, it is often called *Rishabachala* i. e. the bull-shaped hill. Steps cut on the back of this rock bull lead up to the temple at its head. The bird's - eye view of the landscape from that shrine fills the mind and heart with all noble thoughts and feelings.

Out of the Western half of the rock there rises a magnificent temple, inside which are grand palatial shrines for Siva and his consort. The gold-plated dome of Siva's shrine shines brightly in the sun the live-long day : and at night the lights of Ganesa's shrine on the top twinkle like stars in the sky.

We give below two stories, one of which tells us how the Lord of the temple came to be called Mathrubhutheswar or Thayumanavar. The other is about the sage, Thayumanavar, who lived in the 18th Century.

The Lord who appeared as Mother

The tutelary deity of the Tiruchirapalli Rock shrine is known as *Jevandhi Nadhar*(from the Yellow, sweet-smelling Jevandhi flowers, which are dear to his heart). He is also known as *Thayum anavar* i. e. He who, besides being a father, deigned to appear even as a mother. It is an interesting story of how He

attended on a Vaishya girl at the time of her confinement, and ministered to her even as her own mother.

Young Rathnavathi was the wife of Dhanaguptha, a rich Vaishya or merchant of Tiruchirapalli. Her father Rathnaguptha was a merchant prince of Pukhar or Kaverippattinam, a famous Capital and sea-port town of the ancient Chola Kings of the Tamil Country. She was an ardent worshipper of Siva, whose local name was Jevandhi Nadhar. In weal or woe He was her only refuge.

In course of time Rathnavathi conceived. The time of her confinement drew near, and every moment she was eagerly expecting her mother's arrival from Pukhar. But the Kaveri was in flood, and could not be crossed. Her poor mother was on the other side, anxious, but unable to do anything.

As the first labour pains set in, Rathnavathi heard a footstep. The door moved gently on its hinges, and to her great joy, her mother walked into the room, carrying a small bundle of clothes, and medicinal herbs, necessary for the occasion. She attended on her daughter during her confinement, and ministered to her comfort in every way, and looked after her baby—son splendidly. Never once did Rathnavathi suspect it could be any other, but her own mother.

After some days the floods in the Kaveri having gone down, Rathnavathi's own mother came to her in all haste and began to explain. The girl was bewildered, and knew not what to think. She turned from her to

look at the other familiar face. But that other, who was Jevanthi Nadhar himself in the guise of her own mother, now disappeared from the place leaving a trail of glorious light. Mother and daughter prostrated themselves in worship and praised the Lord who had deigned to come to their dwelling even as a mother.

There is a fine sculptural representation of this strange event on the southern face of one of the dark granite pillars in the Chitramantapam. There are also eleven mural pictures, which illustrate the legend. They may be seen as one goes up the long flight of stone steps leading to the shrine. The event is celebrated on the 5th day of the temple festivities during the month of Chittirai.

Saint Thayumanavar

India is a land of saints. Nowhere else in the pages of the world's history do we find such a galaxy of illustrious sages who had renounced the pleasures of life in their unceasing quest for Truth. Saint Thayumanavar "The psalmist of Saivism", as the late Mr. S. K. Devasikhamani, a pious Christian writer, has called him, was one of the greatest saints that ever lived. He is closely associated with the Tiruchirapalli Rock temple. When Vijayaranga Chokanatha Naik, ruled in Trichinopoly from 1704—1734, there was at Vedaranyam (Point Calimere) a man of exceptional virtue and administrative ability named Kediliappa Pillai. The Naik King invited him to become his minister for finance; and he agreed, and took up the office of minister.

Kediliappa prayed to Lord Thayumanavar for a son, as he had given away his first son to be adopted by his elder brother. In due course a son was born to him: and he named him *Thayumanavar* in grateful remembrance of the Lord's mercy. The boy was well educated and he became well versed in the rich sacred literature of the time, in both Tamil and Sanscrit.

When Thayumanavar was a young man his father passed away to the great regret of one and all. The King appointed the young man to succeed his father as minister of state: He discharged the duties of his office very well, and proved himself to be an able minister. But his heart yearned after God, and he longed to devote himself to a life of religion. Daily he went to the shrine of the Rock and prayed for the day when some great Guru would show him the way to God realisation. His prayer was granted at last. One day, when visiting the temple as usual, he saw a great sage, *Mounaguru, The silent self-controlled Guru* sitting in meditation before the shrine of Dakshinamurthi. Thayumanavar knew him intuitively to be his Guru: and he fell at his feet and begged to be taught. The great man initiated him; and he rose full of Divine wisdom, his face beaming with the grace and glory of Siva. Needless to say, that he relinquished the office of minister, and devoted himself to a life of ascetic piety.

Saint Thayumanavar sang psalms of exquisite beauty in praise of God, wherever he went: they are

artesian springs of love that gush forth from the innermost recesses of his heart. One of the most famous of them which will live for all time, asserts triumphantly the Omnipresence of God as well as His infinite Grace and Bliss. It begins with the lines. ——

"*Angu Ingu enadhapadi yengum prakasamoy,*
Anandha purthiyahi, Arulodu niraindhadhu edhu"

It means, "What is That, which being unconfined, pervades all, and is Bliss and Grace perfect?" Some of the saint's songs are about his Guru, about God Thayumanavar and about Siva in his form as Dakshinamurthi (facing South and teaching the Truth to the *Rishis*). Some of these psalms have been included in this booklet. All the songs of Thayumanavar are characterised by a breadth of outlook, and nobility of vision; and they will appeal to all true men in all lands and draw them to the feet of God.

The saint attained "Samadhi" in Lakshmipuram, near Ramnad, after his long ministry on earth. It was in the month of *Thai*, on the day of the star *Vishaka*. Even to-day in the Rock temple, the anniversary of that event is celebrated with due pomp and ceremony. On the 14th day of the Bramhotsavam festivities the image of the saint is brought to the hundred-pillared *mantapam* in all pomp, and worshipped with special honours: after which it is taken back to its shrine in all the significant silence of *Ekanthasevai*.

The pride of Tiruchirapalli is the Rock and the temple on its summit. It is a landmark which you

can never miss by day. And at night its mellow lights beckon to you from afar, and shed peace and blessings on you wherever you may be. As India's poetess, Sarojini Devi once said in a speech, "The spirit of Lord Mathrubutheswara broods over the place and keeps all evil influences far far away".

Men may come, and men may go, but the Rock will abide with us for ever.

—G. K.

112890.

O 213:38, 21192.T
N52-4

The Trichinopoly United Printers Limited. Tiruchirapalli.

SB
4-49

THE
TRICHINOPOLY
UNITED PRINTERS LTD
TIRUCHIRAPALLI